எத்தனை வேகமாகச் செயல்பட்டாலும், இந்த முயற்சியில் வெற்றியடையாத பேரன், இது சரியாகாது என்றுணர்ந்து, இது ஒரு வீணான முயற்சி தாத்தா. இதில் நிச்சயம் தண்ணீர் பிடித்து கொண்டு வரவே முடியாது என்று சொன்னானாம்.

இது வீணான முயற்சி என்றா சொல்கிறாய்? இந்த கரிக் கூடையைப் பார் என்றாராம் தாத்தா. அது வித்தியாசமாக இருப்பதை முதல் முறையாக உணர்ந்தானாம் பேரன். அழுக்காக இருந்த அந்த கரிக்கூடை, உள்ளிருந்தும் வெகு சுத்தமாக இருந்ததாம். தாத்தா சொன்னாராம், கண்ணா, பகவத் கீதை - உண்மையுருவில் - புத்தகத்தை படிப்பதும் இது போன்று தான். உனக்கு புரியாமல் இருக்கலாம், நினைவில் வைத்துக்கொள்ள முடியாமல் இருக்கலாம். ஆனால், நீ படித்துக்கொண்டே இருந்தால், உனக்குள்ளிருந்து மாற்றங்கள் நிகழும். எனவே, இந்தப் பழக்கத்தை விட்டுவிடாதே என்றாராம். இது நமக்கும் பொருந்தும்.

இதோ பகவத் கீதை - உண்மையுருவில்
நம் அனைவருக்காகவும்...

**இந்தப்புத்தகம் இங்கு கிடைக்கும்**

உங்களால் இயன்ற தொகையை அளித்து,
"ஒரு புத்தகத்தை" உங்கள் இல்லத்திற்கு எடுத்துச் செல்லுமாறு உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

## "கடமையைச் செய் பிரதிபலனை எதிர்பாராதே"



# CHARGE YOUR DREAMS WITH



காான்க்ரீஷியா

+91 8883 50 50 50

www.concretia.in



பயமின்மை ✦ நிம்மதி ✦ மனநிறைவு ✦ மகிழ்ச்சி
ஆகியவற்றிக்கு

## நம் இல்லத்தில்

இருக்க வேண்டிய அரிய பொக்கிஷம் ஒன்றை

## இன்றே

சொந்தமாக்கிக் கொள்வோம்!

# பகவத் கீதை

## உண்மையுருவில்

## நம்மிடம் உள்ள பலவிதமான தேடல்களுக்கு தீர்வளிக்கும் ஒன்றை

## இன்றே

## சொந்தமாக்கிக் கொள்வோம்.

நாம் கலியுக்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உலகமே ஒரு சவாலான நேரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. கடினமான காலங்கள் நீடிக்காது ஆனால், விடாமுயற்சியோடு இருக்கும் மனிதர்கள் நீடித்திருப்பார்கள் என்று சொல்வார்கள்.

தொழில்முனைவோராக, நாம் பெரும்பாலும் பல சவால்களை சந்திக்கிறோம். மேலும் தற்போதைய கொரோனா தொற்றுடன் போராடிக் கொண்டிருக்கும் உலகிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற ஆவல் நம் எல்லோரிடமும் இருக்கும். நாம் அனைவரும் ஒரு தீர்க்கமான பார்வை மற்றும் நிறைய நம்பிக்கையுடன் தான் நம் தொழில் பயணத்தை தொடங்கியிருப்போம். இந்தப் பயணத்திற்கிடையே நம் பாதையில் எதிர்பாராத மாற்றுப்பாதைகள் மற்றும் தடைகள் உண்டாகும் என்பதையும் நன்கு உணரந்திருப்போம்.

- ஏகப்பட்ட குழப்பங்களும், தூக்கமில்லாத பல இரவுகளும் இருந்திருக்கலாம்.
- சரியான வழிகாட்டுதலும், அறிவுரையும் யாரிடமிருந்தாவது கிடைக்காதா என்று ஏங்கியும் இருப்போம்.
- அனுபவம் மிக்கவர்களிடமிருந்து ஆலோசனைகள் கேட்கலாமா, யார் சரியானவர்கள் என்ற எண்ணங்கள் எல்லாம் மனதில் ஓடிக்கொண்டே இருக்கலாம்.

பிறரிடமிருந்து நமக்குக் கிடைக்கும் அறிவுரையும் வழிகாட்டுதலும் நமக்கு மிகவும் உதவியாகத் தான் இருக்கும். ஆனால், யாராவது நமக்கு சொல்லிக் கொடுத்துக் கொண்டே இருப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு சரியானதா என்று நாம் யோசிக்க வேண்டாமா? மற்றவர்கள் கொடுக்கும் அறிவுரையை ஒரு பரிசாக நினைத்து, நன்றியுணர்வோடு பெற்றுக்கொள்ளலாம். இவற்றை எல்லாம் மீறி, நமக்கு ஒரு சுய உந்துதல் நிச்சயம் தேவை.



## இதற்கான சரியான வழி

"நம்முடைய பழமை மிக்க கலாச்சாரத்தை நினைவு கூர்ந்து, அவற்றை திரும்பிப்பார்க்கும் நேரம் என்பதை உணர்வது தான்".

பகவத் கீதையில் - வாழ்வியலுக்காக சொல்லப்படாத விஷயங்களே இல்லை. பல அரிய பொக்கிஷங்கள், நாம் தேடி எடுத்து கற்றுக்கொண்டு செயல்படுத்த அதில் மறைந்திருக்கின்றன.

"கடமையைச் செய் பிரதிபலனை எதிர்பாராதே" இது கீதையின் பாடம் என்பதை நாம் நன்கு அறிவோம்.

இதில் தொழில்முனைவோரான நமக்கு ஒரு பெரிய பாடம் இருக்கிறது என்பதை நாம் உணர்ந்து உள்வாங்க வேண்டும். முடிவு எப்படி இருக்குமோ என்பதைப் பற்றி நம் கவனத்தை திசை திருப்பாமல், ஒவ்வொரு கட்டத்திலும் நாம் என்ன செய்கிறோம் என்பதில் கவனம் செலுத்தவேண்டும் என்பது நாம் புரிந்து கொள்ளவேண்டிய முக்கியமான பாடம். ஆனால், பெரும்பாலும் நாம் விளைவுகளை எதிர்பார்த்து, அதற்கேற்றவாறு கவனம் செலுத்துவதால், தொழில் பயணத்தை அனுபவிக்காமல் விட்டுவிடுகிறோம்.

பகவத் கீதை - குருக்ஷேத்திரத்தின் போர்க்களத்தில் அர்ஜுனனுக்கும் கிருஷ்ணருக்கும் இடையிலான உரையாடல் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்று தான். வேதங்களிலும் உபநிடதங்களிலும் இருக்கும் கருத்துகளை 700 பாடல்களாக நமக்கு அளித்திருக்கும் ஒரு கருவூலம் என்று கூட சொல்லலாம். இது ஏதோ ஒரு மதம் சார்ந்த புத்தகமாக இல்லாமல், நம் வாழ்க்கையின் நோக்கத்தை புரிய வைக்கும் ஒரு பாடப்புத்தகமாகத் தான் பார்க்க வேண்டும்.

நம்முடைய பிரச்சினைகளையும் சவால்களையும், "சமநிலையுடனும்", "எளிதாகவும்" தீர்க்கும் வழிகளையும் காண்பிக்கும் ஒரு வழிகாட்டியாக புரிந்துகொள்ள வேண்டும். இதிலிருந்து கிடைக்கும் பாடங்கள்,



தொழில்முனைவோருக்கு மட்டுமில்லாமல், வாழ்க்கையில் அர்த்தத்தைத் தேடும் அனைவருக்கும் கீதையின் 18 அத்தியாயங்களும் ஒரு அழகான பாதையை வகுத்துக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

பகவத் கீதை - உண்மையுருவில் என்ற புத்தகம் உலகம் முழுவதும் லக்ஷக்கணக்கானவர்களின் மீது ஒரு அற்புதமான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. கீதையால் எந்த விதமான மாற்றங்கள் ஏற்படலாம் என்பதை நாம் சுலபமாக புரிந்து கொள்ள, இதோ ஒரு சுவாரசியமான கதை...

ஒரு மலையடிவாரத்தில் இருந்த தன்னுடைய தோட்டத்தில், ஒரு வயதான விவசாயி தன் இளம் பேரனுடன் வாழ்ந்து வந்தாராம். அவர் தினமும் அதிகாலையில் எழுந்து, **பகவத் கீதை** - உண்மையுருவில் புத்தகத்தை படிக்கும் வழக்கத்தை வைத்துக் கொண்டிருந்தாராம். பேரனுக்கோ தாத்தா மீது நிறைய மதிப்பு, அவரைப்போலவே இருக்க வேண்டும் என்ற ஆவல். ஒரு நாள் தன் தாத்தாவிடம் சென்று, நானும் உங்களைப் போலவே **பகவத் கீதை** - உண்மையுருவில் என்கிற புத்தகத்தை தினமும் படிக்கிறேன். பெரும்பாலும் ஒன்றும் புரியவில்லை. அப்படியே ஏதாவது புரிந்தாலும், புத்தகத்தை மூடியவுடன் மறந்து விடுகிறது. இதைப் படிப்பதால் எனக்கு என்ன கிடைக்கும்? என்று கேட்டானாம் பேரன்.

தான் படித்துக்கொண்டிருந்த புத்தகத்தை மூடி வைத்துவிட்டு, பேரனிடம் அடுப்பெரிக்கும் கரி வைத்திருந்த கூடையைக் கொடுத்து, அருகிலிருந்த ஆற்றிலிருந்து அதில் நீர் எடுத்து வரும்படி சொன்னாராம். தாத்தா சொல்லைத் தட்டாத பேரனும் சொன்னவாறே செய்ய முற்பட்டானாம். ஆனால், வீடு வந்து சேரும் முன்பே கூடையில் இருந்த நீர் கசிந்து, காலியானதைப் பார்த்த தாத்தா சிரித்துக்கொண்டே, இன்னும் வேகமாகச் செயல்பட வேண்டும் அருமைப் பேரனே என்றாராம். சிறுவனும் சிறிது வேகமாக ஓடி வந்தாலும், கூடையில் நீர் நிற்கவில்லை. தாத்தா திரும்பவும் அவனை ஊக்கப்படுத்தி அனுப்பி வைத்தாராம்.